## N THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.280/2022 | Village | : | டீஉடையார்பட்டி |
| Prosecution witness | : | PW-4 | Taluk | : | மணப்பாறை |
| Name | : | திருமதி.திவ்யபிரகாசி | Occupation | : | இசேவை மையம் |
| Husband Name | : | திரு.பீட்டர் லாரன்ஸ் | Age | : | 28 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 23.06.2026.**

A1 abated. A2 present. A3, A4 absent. U/s 355 BNSS filed and allowed.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தற்போது டீஉடையார்பட்டி மணப்பாறை தாலுக்காவில் குடியிருக்கிறேன். நல்லாம்பிள்ளையிலுள்ள இசேவை மையத்தில் பணியாற்றி வருகிறேன். நான் திருமணத்திற்கு முன்பு எனது அப்பாவுடன் ஏகௌரியம்மன் நகரில், சென்னம்பட்டி ரோடு வல்லம் முகவரியில் வசித்து வந்தேன். நான் அப்போது பன்னிரெண்டாம்வகுப்பு படித்து கொண்டிருந்தேன். கடந்த 25.8.2014 அன்று இரவு 10.30 மணியளவில் எங்கள் வீட்டிற்கு நான்குபேர்கள் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. எங்கள் வீட்டிற்கு பின்னே குடியிருக்கும் ரூபி தப்பான வேலை செய்து வந்தார். அவர்களை தேடி ஆட்கள் வருவார்கள். சம்பவம் நடப்பதற்கு ஒன்றரை மாதத்திற்கு முன்பு எனது அப்பா ரூபியிடம் போய் பெண்பிள்ளைகள் குடியிருக்கும் ஏரியாவில் ஆண்கள் எல்லாம் வந்து செல்வது சரியா என்று கேட்டார். அதற்கு ரூபி என்வீட்டில் எதுவேணாலும் செய்வேன் என்று சண்டையிட்டு சென்றுவிட்டார். சம்பவதன்று எனது அப்பா ஊருக்கு போய்விட்டு வீட்டிற்கு இரவு 9.30 மணிபோல் வந்தார். ரெங்கராஜ், செல்வராஜ், ஆறுமுகம் மற்றும் இருவர் ஆகியோர் ரூபி வீட்டிற்கு நால்வரும் வந்ததை பற்றி கேட்டார்கள். அவ்வாறு கேட்டது என் அப்பாதான் என்று ரூபி அந்த நால்வரையும் அழைத்து கொண்டு எங்கள் வீட்டிற்கு வந்து என் அப்பாவிற்கு தலையிலும் இடதுகையிலும் வெட்டிவிட்டார்கள், பின் அண்ணன் டேவிட்டை

இடதுபக்கதோள்பட்டையில் வெட்டிவிட்டார்கள். அதன்பிறகு 108ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி தமக மருத்துவமனையில் சேர்த்தோம். ஆய்வாளர் என்னை விசாரித்தார் நான் நடந்ததை சொன்னேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

ரூபியை பற்றி காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தோமா என்றால் இல்லை. காவல்நிலையம் எங்கள் வீட்டிலிருந்து எவ்வளவு தூரம் என்றால் 1 1/2 கி.மீ. இருசக்கர வாகனத்தில் வந்ததாக சொல்கிறேனே அது எண்ண வண்ணம் என்ன நிறுவனம் என்றால் தெரியாது. முதன்முதலில் என் அப்பா போய்கேட்டது எந்த தேதி என்றால் தெரியாது. என் அப்பாவை வெட்டியது, என் அண்ணனை வெட்டியது யார் பெயர் என்ன அடையாளம் என்ன என்றால் தெரியாது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.06.23 18:49:09 +0530

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.